**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பணியகத்தின் நிதிக்கூற்றுகள் ஊடாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,பணியகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பணியகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பணியகத்தினதொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பணியகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல்,முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பணியகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுகளை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பணியகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| உரிய நியமத்துடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பயன்படுத்தும் உரிமையின் அடிப்படையில் பணியகத்தினால் 2010 ஆம் ஆண்டில் 50 வருட காலத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ஹோமாகமையில் அமைந்துள்ள காணிக்காக 2010 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் ரூபா.14,174,070 ஆன பெறுமானத்தேய்வு இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 46 பந்தியின் பிரகாரம் முன்னோக்கி சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்காது நடப்பாண்டின் செலவினம் ஒன்றாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய ஆண்டிற்கான லாபம் அதற்கு சமமான அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் உரிய முறையில் கணக்குகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் கொண்டு செல்லும் பெறுமதி அதன் கொண்டு செல்லும் பெறுமதியினால் பொறுன்மையான ரீதியில் வேறுபடும் போது மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியதுடன் நியாயப் பெறுமதி கருத்திற்கொள்ளக்கூடிய அளவில் விரைவாக மாற்றமடையும் போது குறித்த உருப்படிகளுக்கு வருடாந்த மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் பணியகத்தின் சொத்துக்கள் தொடர்பில் 2010 ஆம் ஆண்டின் பின்னர் மீள் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிராமையால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் நியாய பெறுமதி நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள இவ்விடயம் சரியானதாகும். சொத்துக்களின் மீள் மதிப்பீட்டு பணி வெளிவாரி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்வதற்கு உரிய ஏற்பாடுகள் இடம்பெற்றவாறு உள்ளன. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பணியகத்துக்கு சொந்தமான சொத்துக்களின் சரியான பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிற்போடப்பட்ட குத்தகை சொத்துக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா.127,248,426 ஆக காணப்படவேண்டிய போதிலும் அந்த மீதி ரூபா.131,782,817 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ள படியாக பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் கணக்கில் மீதி ரூபா.4,534,391 இனால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் மீளாய்வாண்டில் பிற்போடப்பட்ட வரிச்சீராக்கங்கள் நடப்பாண்டில் (2021) திருத்தப்படுவதாக எம்மால் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதற்கமைய அனைத்து திருத்தங்களும் நடப்பாண்டின் இறுதி மீதிக்கு சீராக்கப்பட்டு திருத்தப்பட்டுள்ளது. | பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த கணக்கீட்டு வழுவினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கடந்த வருடத்திற்குரிய ரூபா.2,000,022 ஆன செலவினம் மற்றும் மீளாய்வாண்டின் செலவினமான ரூபா.22,176,031 ஆன கட்டிடம் மற்றும் வாகனங்களுக்கான பெறுமானத்தேய்வு மீளாய்வாண்டின் செலவினத்தில் கழிக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டிற்கான இலாபம் ரூபா.20,176,009 இனால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும். | ஆண்டிற்குரிய செலவினங்களை சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் பணியகத்தின் கட்டடங்களுக்கான மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா.76,533,717 ஆன போதிலும் அது ரூபா.77,870,319 ஈக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டிற்கான இலாபம் ரூபா.1,336,602 இனால் குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஹாலி-எல்ல, தம்புள்ள, தங்கள்ள, இரத்தினபுரி மற்றும் மதுகம கட்டிடங்களின் பெறுமானத் தேய்வினை கணிப்பீடு செய்யும் போது கையேற்கப்பட்ட திகதியிலிருந்து 2 வருடங்கள் வரையிலும் வருடாந்தம் சரியாக பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இக்கட்டிடங்களுக்காக சில வருடங்களின் பின்னர் கட்டிடத்தின் ஆயுட்காலம் (13 1/3) அதிகரிக்காத வகையில் சொத்துக்களின் பெறுமதியில் அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டுள்ளது. அப்பெறுமதிகளும் | ஆண்டிற்குரிய பெறுமானத்தேய்வு சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளடங்களாக பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டுள்ளது . | |
| (ஈ) | வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனத்திற்காக செலுத்த வேண்டியதாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா.250,487,782 ஆன மீதியில் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 40 கடன் கொடுத்தோர் மீதிகள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா.4,096,522 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | முகவர் நிறுவனங்களில் கணக்கு வைக்கும் போது சரியான தன்மை தொடர்பில் பணியகத்திற்கு சான்றுபடுத்த மேற்கொள்ள முடியாது. பணியகத்தின் கணக்குகளின் பிரகாரம் கடன் கொடுத்தோர் மீதிகளின் சரியான தன்மை குறித்த பதிவேடுகளை பரீட்சிப்பதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். | மீதி உறுதிப்படுத்தல்களின் மூலம் கடன் கொடுத்தோரின் மீதிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | 2018/2019 மற்றும் 2019/2020 மதிப்பீட்டு ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட வருமான வரி தொடர்பான சுயமதிப்பீடு திருத்தப்பட்டமை தொடர்பிலான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படல் அல்லது நிராகரிக்கப்படல் தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 136(6) பிரிவின் பிரகாரம் 90 நாட்களினுள் அறிவித்திருக்காமையால் அந்த அதிகார சட்டத்தின் 26(1) உபபிரிவின் பிரகாரம் விண்ணப்பத்திற்கு அனுமதி அளித்திருக்காதிருக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கருத வேண்டும். எனினும் பணியகத்தினால் 2021/2022 ஆம் ஆண்டிற்கான வருமான வரி கணக்கு வைக்கும் போது மேற்படி திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதி நிதிக்கூற்றுக்களினுள் வரிச்சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டிற்கான வரி செலவினம் ரூபா.188,825,8244 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2018/2019 மற்றும் 2019/2020 மதிப்பீடு ஆண்டுகளுக்கு உரியதாக திருத்தப்பட்ட வருமான வரி அறிக்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் தொடர்பில் எமக்கு எழுத்து மூலம் இதுவரை அறிவிக்கப்பட்டிராத போதிலும் வாய்மொழி மூலமாக அது தொடர்பில் உறுதிப்படுத்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

-----------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச் சட்டம் | | | |
| (i) 17(2) பிரிவு மற்றும் 45(2) பிரிவுகள் | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பணியகத்தின் நிதியத்திற்கு சேகரிக்கப்பட வேண்டிய பணியகத்தின் வருமானங்கள் தொழிலாளர்களின் நலன்புரி நிதியத்திற்கு சேகரிக்கப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டினுள் ரூபா.544,146,050 ஆன வருமானம் அந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | 1985 இன் 21 ஆம் இலக்க பணியாக அதிகாரச் சட்டத்தின் 45(2)ஈ இன் கீழ் பணியகத்தினால் நலன்புரி நிதியத்திற்கு பணத்தை சாட்டும் இயலுமை உள்ளதுடன் அதற்கமைய பல்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு விதங்களில் கிடைத்துள்ள அங்கீகாரங்களின் அடிப்படையில் இந்த ரூபா.544,146,050 ஆன தொகை அந்நிதியத்திற்கு சேகரிக்கப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் தொழிலாளர் நலன்புரி நிதியத்திற்கு சேரும் வருமானம் மாத்திரம் அந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ii) 17(3) பிரிவு மற்றும் 48(1) பிரிவுகள் | பணியகத்தின் நிதியத்தினால் செலுத்த வேண்டிய வெளிநாட்டு தூதரகங்களில் சேவைக்காக இணைப்புக் செய்யப்பட்டுள்ள பணியகத்தின் பதவியணிகளுக்கு உரிய சம்பளம் மற்றும் ஏனைய படிகள் அதிகார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா.428,560,316 மீளாய்வாண்டினுள் தொழிலாளர் நலன்புரி நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது. | இலங்கைக்கு வெளியே வேலையில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தூதாங்களை ஈடுபடுதல் மற்றும் அதற்குரிய பொதுவான செலவினங்களை மேற்கொள்ள நேரிடும். குறித்த செலவினங்கள் நலன்புரி நிதியத்தின் செலவினமாக கருதுதல் 1998 ஜூன் 03 ஆம் திகதிய 1998/783/32/017 அம் இலக்க அமைச்சரவை கட்டளை மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் வெளியிடப்பட்டுள்ள | உள்நாட்டு ரீதியில் இணைப்புச் செய்யப்படும் பதவியணியை போன்றே வெளிநாட்டு தூதரகங்களில் அமைந்துள்ள நலன்புரி பிரிவுகளில் சேவையில் ஈடுபடும் பதவியணிக்கு பணியகத்தின் நிதியத்தினால் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | Accounting circular NO 01 OF 1999 சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது . குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது நிதி அமைச்சின் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே ஆகும். | |
| (ஆ) | 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு முரணாக 2002 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த சம்பளத்தைக் போன்று 12 மடக்கினால் இடர் கடனாக செலுத்துவதற்கு பணியகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்த காரணத்தால் மீளாய்வாண்டின் ரூபா.84,021,973 ஆன தொகை 265 உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கை எல்லைகளை விஞ்சி இடர்கடனாக செலுத்தப்பட்டிருந்தது. | பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பணியக அதிகாரச் சட்டத்தின் 16(2)(உ),(ஊ) ஆகிய இரு பிரிவுகளின் பிரகாரம் கிடைத்பதவியணிக்கு 1995.05.01 ஆம் திகதியிலிருந்து இடர் கடன் தொகை வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது . இந்த அரச நிர்வாக சுற்றறிக்கை அமைச்சின் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்கள தலைவர்களுக்காக வெளியிடப்பட்டுள்ளதுடன் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளுக்காக அறிவுரைகள் வழங்கப்படவில்லை. | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளமையால் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

---

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

---

மீளாய்வாண்டின் குழுமத்தின் மற்றும் பணியகத்தின் செயற்பாட்டு பெறுபேறு முறையே ரூபா 880,154,212 மற்றும் ரூபா 895,481,128 ஆன இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு மாறாக கடந்த வருடத்தின் நட்டம் முறையே ரூபா 743,764,028 மற்றும் ரூபா 736,961,354 ஆகும். அதற்கமைய குழுதமத்தினதும் பணியகத்தினதும் நிதிப்பெறுபேறுகளில் முறையே ரூபா 1,623,918,240 இனால் மற்றும் ரூபா 1,632,442,482 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு குழுமத்தினதும் பணியகத்தினதும் வருமானம் அதிகரிபிரதான காரணங்களாக இருந்தது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 ஆம் ஆண்டில் 100,000 எண்ணிக்கையான பத்திரிகைகளை அச்சிடுவதற்கு உரியதாக தனியார் நிறுவனம் ஒன்று மேற்கொண்ட கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்டுள்ள ரூபா.3,200,000 ஆன நிதி மோசடி தொடர்பில் ஆரம்ப மற்றும் முறையான ஒழுக்காற்று விசாரணைகளில் குற்றவாளிகளாக உறுதி செய்யப்பட்டிருந்த பணியகத்தின் இரு உத்தியோகத்தர்களிடம் இருந்து மேற்குறிப்பிட்ட பணத்தை தவணை ரீதியில் அறவிடுவதற்கு 2019 ஆம் ஆண்டில் ஒழுக்காற்று கட்டளை வழங்கப்பட்டிருந்தது. பணியகத்தினால் அந்த ஒழுக்காற்று கட்டளைகளை நடைமுறைப்படுத்தாது வெளிநாட்டு தூதரகங்களில் இருந்து பெற வேண்டிய பணமாக கருதி தவறாக கணக்கு பதிவுகள் இடம் பெற்றிருந்தன. மீளாய்வாண்டினுள் அவர்களில் ஒரு உத்தியோகத்தரால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டின் பிரகாரம் எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் பணியகத்தின் தலைவரினால் அந்த உத்தியோகத்தர் குற்றமற்றவராக விடுவிக்கப்பட்டு அந்த நட்டம் பெறவேண்டிய வருமானங்களில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. | இந்த சம்பவத்திற்கு உரியதாக பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒழுக்காற்று விசாரணையை அடிப்படையாகக் கொண்டு குறித்த நட்டத்தினை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2019 மே 24 ஆம் திகதி ஒழுக்காற்று கட்டளை ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. எனினும் அது தொடர்பில் அமைச்சின் செயலாளரினால் 2019 ஜுன் 12 ஆம் திகதி விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டதாகவும் அக்குழுவிற்கு அவசியமான பதிவேடுகளை வழங்குமாறும் பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் முன்னர் வழங்கப்பட்ட ஒழுக்காற்று கட்டளையை ரத்து செய்து 2021..04.20 ஆம் திகதி அனைத்து குற்றங்களில் இருந்தும் விடுவித்து திருத்தப்பட்ட ஒழுக்காற்று கட்டளை பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மீண்டும் வெளியிடப்பட்டிருந்தது. அத்தீர்மானத்தின் அடிப்படையில் சம்பவம் தொடர்பில் மற்றைய உத்தியோகத்தராலும் பணியகத்திற்கு சமர்பிக்கப்பட்ட மேன்முறையீட்டினை | பணியகத்திற்கு நேர்ந்துள்ள நட்டத்திற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களை இனங்கண்டு அந்த பணத்தை மீளஅறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கருத்தில் கொண்டு அவருக்கு வழங்கப்பட்ட ஒழுக்காற்று கட்டளையும் திருத்தப்பட்டு அனைத்து குற்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அபுடுபாய் மற்றும் இஸ்ரேல் தூதரகங்களில் அமைந்துள்ள தொழிலாளர் நலன்புரி பிரிவுகளில் முறையே 2014 ஆம் ஆண்டில் ரூபா.1.15 மில்லியன் மற்றும் 2019 ஆம் ஆண்டில் ரூபா.1.83 மில்லியன் ஆன நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. அவற்றுள் இஸ்ரேல் தூதரகத்தில் இடம்பெற்ற நிதி மோசடி கூறிய ரூபா.914,167 மற்றும் அபுடுபாய் தூதரகத்தில் இடம்பெற்றிருந்த ரூபா.1.15 மில்லியன் ஆன நிதி மோசடி சுமார் 08 வருடங்கள் கடந்துள்ள போதிலும் மீள அறவிடுவதற்கு தவறியிருந்தது. | அபுதுபாய் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ள நிதி மோசடிக்கு உரிய சட்ட நடவடிக்கைகள் இடம்பெற்றவாறு உள்ளன. 2019 ஆம் ஆண்டில் இஸ்ரேல் தூதரகத்திற்கு இடம்பெற்ற நிதி மோசடிக்கு குறித்த உத்தியோகத்தர்கள் இதுவரையிலும் ரூபா.1,108,614 இற்கு அண்மிய தொகை அறவிடப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நிதிமோசடிகள் காரணமாக ஏற்பட்டுள்ள நட்டத்தை முழுமையாக பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச் சட்டத்தின் 15(அ),(ஒ),(ஓ) பிரிவுகளின் பிரகாரம் இலங்கையர்களுக்காக இலங்கையிலிருந்து வெளியே வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல தொழில்வாய்ப்பு சந்தர்ப்பங்கள் தொடர்பில் ஆராய்ச்சிகள் மற்றும் கற்கை பணிகளை மேற்கொள்ளல், வேலைவாய்ப்பிற்காக இலங்கையர்களை அனுப்பி | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இவ்விடயம் தொடர்பில் உரியதாக 04 ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பித்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். | அதிகாரச் சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேறும் வகையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் தரவு வங்கியை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைத்தல் மற்றும் திரும்பி வருதல் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தரவு வங்கி ஒன்றை நிறுவி பேணிச் செல்லும் நோக்கில் ஆராய்ச்சி பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு நிறைவடையும் போது 13 உத்தியோக்தர்கள் சேவையில் இணைப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் மாதிரி பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்ட 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 09 ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டு இருந்த போதிலும் அவற்றுள் 04 ஆராய்ச்சிகளில் பணிகள் நிறைவு செய்யப்பட்டு இருந்தன. எனினும் மேற்கூறிய நோக்கங்கள் நிறைவேறும் வகையில் அந்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிராததுடன் தகவல்கள் தரவு வங்கியிலும் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஹோமாகம(மாஹேனவத்த) அமைந்துள்ள காணி 2015 மார்ச் 23 ஆம் திகதி முதல் ரூபா.52 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதிக்கு பணியகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காயவுத் திகதியான 2021 ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அதற்குரிய வரி உரித்துறுதி தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. வரி உரித்துறுதியை தயாரிப்பதற்காக மீண்டும் 2018 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யும்போது பெறுமதியானது ரூபா.64 மில்லியனாகியிருந்தது. | ஹோமாகம மாஹேனவத்த காணியின் குத்தகை உரித்துறுதியை தயாரிப்பதற்காக 2020 மே 01 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் புதிய உரித்துறுதி கட்டணங்களும் 2019 மே 06 ஆம் திகதி செலுத்தப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் உரித்துறுதியை தயாரிப்பதற்கு உரிய பணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்படவில்லை. | குத்தகை உரித்துறுதியை தயாரித்தல் துரிதப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | வேலைவாய்ப்பு அனுமதிப்பத்திரம் முறைமை (Employment Permit System) கீழ் தென் கொரியாவிற்கு இலங்கை தொழிலாளர்களை அனுப்புவதற்கு உரியதாக அந்நாட்டின் அரசின் தலையீட்டுடன் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் காலம் | திருத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமைச்சின் மூலம் உரிய தரப்பினருக்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இரு அரசுகளுக்கிடையே தற்போது நடைமுறையில் உள்ள மற்றும் இலங்கை தொழிலாளர்களுக்கு அதிக நலன் ஏற்படும் வகையிலான தொழில்வாய்ப்பு |

| | | | |
|---|---|---|---|
| | 2019 செப்டம்பர் 29 ஆம் திகதி நிறைவடைந்து இருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை காலம் ரத்தாகி 06 மாதங்கள் கடந்துள்ள போதிலும் நியாயமான காரணம் ஒன்று இல்லாது நாளது வரையாக்குதல் தாமதம் அடைந்தால் அந்த உடன்படிக்கையை ரத்து செய்யும் அல்லது இடைநிறுத்தம் இயலுமை காணப்படுகின்றது. இதன் கீழ் அந்நாட்டிற்கு ஊழியர்களை அனுப்பும் பணிகள் பணியகத்தினால் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கடந்த 05 வருட காலத்தினுள் 20,144 எண்ணிக்கையான தொழில் வாய்ப்புகளுக்கு அனுப்பப்பட்டிருந்தனர். எனினும் 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உடன்படிக்கையை நாளது வரையாக்குதல் 2022 ஜுன் வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரிய உடன்படிக்கைகள் நாளது வரையாக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இஸ்ரேல் நாட்டிற்காக இலங்கை தொழிலாளர்களை அனுப்பும் நோக்கில் தேசிய தொழில்சார் தகைமைகள் (NVQ3) இன் கீழ் நோயளர்களின் பராமரிப்பு சேவை பயிற்சி பாடநெறிக்காக பணியகத்தினால் நடாத்தப்படும் பரிந்துரைக்கப்பட்ட திறன்கள் அங்கீகரிக்கப்பட்ட விடய கோவைக்கு 03 மாதங்களிற்குள் நிறைவு செய்யப்பட வேண்டிய 12 பாட அலகுகள் உள்ளடக்கப்பட்ட போதிலும் பணியகம் அப்பாட நெறியினை 02 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு அனுமதியை பெற்றிருந்தது. சர்வதேச திறன்கள் மட்டத்திற்காக தேவையான நடைமுறை பயிற்சி 260 மணித்தியாலங்களை உள்ளடக்காத வகையில் அங்கீகாரமின்றி பாடநெறியின் காலமானது 45 நாட்கள் வரையிலும் மீண்டும் 30 | இதற்குரிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் பணியகத்தினால் நோயாளர்களின் பராமரிப்பாளர்களாக பயிற்சி வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு செலவிடப்படும் மதியுரையாளர் சம்பளம் செலுத்துதல் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக பணியகத்தின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பயிற்சிக் கட்டணமாக ஆகக்குறைந்த தொகை ஒன்று பயிலுனர்களிடமிருந்து அறவிடப்படுகின்றது. பயிற்சி சான்றிதழை வழங்கி ஒரு வருடத்தின் பின்னர் மீண்டும் 07 நாள் பயிற்சி (Refresh) வழங்கப்படுகின்றது. முன்னர் வழங்கப்பட்ட | பணியக அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு இணைத்துக் கொள்ளப்படும் தொழிலாளர்களை பயிற்றுவித்தல் மற்றும் பழக்கப்படுத்தும் கட்டணங்களை அறவிடாதிருக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| நாட்கள் வரையிலும் குறைக்கப்பட்டு இணையத்தளத்தின் ஊடாக நடாத்தப்பட்டிருந்தது. அப்பயிற்சியினை நிறைவு செய்து சுமார் ஒரு வருடத்தின் பின்னர் விசாவுக்கான விண்ணப்பத்தினை மேற்கொள்ளும் போது அந்த தகைமையை நாளது வரையாக்குதல் அத்தியாவசியம் என இஸ்ரேல் தூதரகத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தமையால் ஒரு ஊழியரிடம் இருந்து ரூபா.8,100 அறவிடப்பட்டு 07 நாட்களில் அந்த பாடநெறி மீண்டும் கற்பிக்கப்பட்டிருந்தது. வேலைவாய்ப்பு தேவைப்படின் பிரகாரம் ஆங்கில பாட அறிவுடையவர்களுக்காக ஆங்கில மொழி மூலத்தில் பயிற்றுவித்து அவர்களுக்கு குறுகிய கால ஆங்கிலப் பாட நெறி ஒன்றுக்கு கட்டணம் அறவிட்டு நடாத்துவதற்கு பணியகம் நடவடிக்கை எடுத்திருந்தது. பணியகத்தினால் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக அனுப்புவதற்கான அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு பயிற்சி கட்டணமாக ரூபா.84.91 மில்லியன் அறவிடப்பட்டு இச்செயற்றிட்ட பயிற்சி பாடநெறி நடாத்தப்பட்டு இருந்தபோதிலும் பயிற்சியை நிறைவு செய்த 5,918 பேரில் 862 பேர் மாத்திரம் குறித்த தொழில் வாய்ப்பிற்காக வெளிநாடு சென்றிருந்தனர். | பயிற்சியின் நிலைமையில் நிலவிய சிக்கல் காரணமாக அல்ல என்பதனை சுட்டிக் காட்டுகின்றேன். தற்போது பணியகத்தின் மூலம் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய 07 நாட்களுக்கு முன்னர் குடியகழ்வு பயிற்சி ஒன்று இலவசமாக வழங்கப்படுகின்றது. | |

## 3.3 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இஸ்ரேல் அரசுடன் இலங்கை அரசு ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் பிணியாளர்களின் பராமரிப்பாளர்களுக்காக 500 தொழில் கட்டளைகள் கிடைத்திருந்ததுடன் 148 | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எனைய நிறுவனங்களால் வழங்கப்படும் சமனான தகைமைகள் (பிணியாய்வு சேவைகள் III ஆம் | இலங்கையில் பயிற்சிபெற்ற தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொழில் வாய்ப்புகள் தொடர்பில் அரச |

| | | |
|---|---|---|
| பேர் அதற்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர். நடைமுறைப் பயிற்சி ஒன்றுடன்ா 11 மாத கால பயிற்சி பாடநெறி சான்றிதழ் அல்லது பணியகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் (NVQ 03) மட்டத்திலான பிணியாய்வு சேவை பயிற்சி பாடநெறி சாதனை சான்றிழை பெற்றிருத்தல் இந்த தொழில்களுக்கான ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமையாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கமைய மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நடைமுறை பயிற்சி உடனான தேசிய தொழில்சார் தகைமை 04 மற்றும் 03 மட்டத்திலான சாதித்தல் கொண்ட அரச மற்றும் அரசு அல்லாத 21 பயிற்சி நிலையங்களில் உரியமுறையில் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களுக்கு இந்த தொழில் வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்க முடியாதிருந்தது. | மட்டம்) மேற்படி உடன்படிக்கையில் உள்ளடக்கத் தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு இஸ்ரேல் அரசிற்கு தற்போது கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் எதிர்காலத்தில் இவ்வாறான பயிலுனர்களுக்கும் இதன்கீழ் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்படும். | மற்றும் அரசு அல்லாத பயிற்சி நிறுவனங்களுக்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை ஒன்று இல்லாது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வெளிநாட்டு தூதரகங்களில் அமைந்துள்ள தொழிலாளர் நலன்பரி பிரிவுகளுக்கு பணியகத்தினால் தயாரிக்கப்பட்ட அளவீடுகளை அடிப்படையாகக் கொண்டு சியரட்ட பேருவையின் அடிப்படையில் 31 பேர் மற்றும் உள்நாட்டு அடிப்படையில் 67 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். சியரட்ட பேருவ அடிப்படையில் மற்றும் உள்நாட்டு அடிப்படையில் தெரிவு செய்தமைக்குரிய நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் உள்ளபோதும் | 1985 இன் 21 இலக்க வெளிநாட்டு சேவைகள் வேலைவாய்ப்பு பணியக அதிகாரச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பிற்குரிய விடய பொறுப்பு அமைச்சருக்கு சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் தூதரகங்களில் சேவைகளுக்காக உத்தியோகத்தர்களை நியமிக்க முடியும். | தூதரகங்களுக்காக உத்தியோகத்தர்களை நியமிக்கும்போது தகைமை வாய்ந்த உத்தியோகத்தர்களின் நியமிப்பதற்கான நடைமுறைகமைய மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறையே குறைவான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட 09 பேர் மற்றும் 16 பேர் ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | | |
| (ஆ) | சிங்கப்பூரில் அமைந்துள்ள வெளிநாட்டு தூதரகத்தின் தொழிலாளர் நலன்புரி பிரிவிற்கு மதியுரையாளராக 2020 ஆம் ஆண்டில் வெளிவாரியாக இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் குறித்த பதவிக்கான ஆகக்குறைந்த வயதினை பூர்த்தி செய்திராததுடன் குறித்த துறையில் அல்லது அந்த சேவை தொடர்பில் அனுபவத்துடனான ஒருவர் அல்ல என்பதுடன் அதற்கான நேர்முகப்பரீட்சை சுயாதீனமானதாக அல்லாது விசாரணை சபை ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த உத்தியோகத்தர் பணிப்பாளர் சபையில் அங்கீகாரத்தின் கீழும் முன்னால் அமைச்சின் செயலாளரின் இணக்கத்தின் அடிப்படையிலும் நியமிக்கப்பட்டுள்ளார். தூதரகத்தின் சேவைக்காக அனுப்பப்படும் சந்தர்ப்பத்தில் அவர் 30 வயதினை பூர்த்தி செய்துள்ளார். இந்த நேர்முகப் பரீட்சைக்காக பெருமளவு எண்ணிக்கையான விண்ணப்பதாரர்கள் பங்குபற்றி இருந்தமையால் நேர்முகப்பரீட்சை சபைகள் சில நியமிக்கப்பட்டன. எனினும் N.M.திப்புட்டுமுணுவ அவர்களின் புதல்வர் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த திகதியில் அவர் நேர்முகப்பரீட்சை சபையின் அங்கத்தவராக செயற்பட்டிருக்கவில்லை. | உரிய முறையில் தகைமைகள் மற்றும் அனுபவமுடைய உத்தியோகத்தர்கள் இந்த அலுவலகங்களில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணியகத்துக்கு சொந்தமான 16 உத்தியோகத்தர்களை கொண்டமைந்த உள்ளக கணக்காய்வு பிரிவினால் மீளாய்வாண்டினுள் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 52 கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களில் 28 நிகழ்ச்சித் திட்டங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டினுள் 45 கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் அவற்றுள் | 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய பாதகமான நிலைமைகளின் அடிப்படையில் சேவை முறையின் பிரகாரம் சேவைக்கு அறிக்கையிட்டிருந்த காரணத்தால் திட்டமிடப்பட்ட கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களை | பணியகத்தின் உள்ளக நிர்வாக நடைமுறைக்கு முறையான திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 23 அறிக்கைகளுக்கு உரிய கணக்காய்வு ஒப்படைப்புகளை வழங்கி அறிக்கைகளை வெளியிடுவதற்கு 06 மாதங்கள் முதல் 05 வருடங்களுக்கு இடைப்பட்ட காலதாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. அவ்வாறே மேற்குறிப்பிட்ட 06 அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகள் தொடர்பில் உரிய முறையில் உள்ளக கணக்காய்வு பிரிவிற்கு தெளிவுபடுத்தல்கள் கிடைத்திருக்கவில்லை. உள்ளக கணக்காய்வு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் பின் தொடர்வதற்கும் முறையான வேலைத்திட்டம் ஒன்று பணியகத்தினுள் தாபிக்கப்பட்டிராததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் ஊடாகவும் அது தொடர்பில் போதிய கலந்துரையாடல்கள் இடம்பெற்று இருக்கவில்லை. அதற்கமைய இந்த அளவிற்கு அனுப்பப்பட்டுள்ள பௌதிக மற்றும் மனித வளங்கள் நிறுவனத்தின் நோக்கங்களுக்காக ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு இயலுமான வகையில் வேலைத்திட்டம் ஒன்று காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. எதிர்காலத்தில் தங்களால் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு இணங்க உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பரிந்துரைகளை உள்ளடக்கிய பொழிப்பு அறிக்கையொன்றினை கணக்காய்வு முகாமைத்துவக் குழுவின் கவனத்திற்கு முன்வைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |